RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சங்க இலக்கியத்தில் புழங்குபொருள் பண்பாடு

**சி. முனியசெல்வி** [அ] *

[அ] தமிழ்த்துறை, சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி-627011, இந்தியா

# A Study of Material Culture in Sangam Literature

**C. Muniaselvi** [a], *

[a] Department of Tamil, Sadakathullah Appa College, Tirunelveli – 627011, India

*Corresponding Author:
selvimuruganmamphil@gmail.com

**ABSTRACT**

Sangam literature serves as a historical mirror reflecting the lifestyle, culture, and civilization of the ancient Tamils. Among its many significant features are the detailed references to the various objects and materials used in the everyday lives of the people. These material artifacts reveal the close relationship that the Sangam-age Tamils maintained with nature and demonstrate their ability to adapt natural resources to meet their daily needs. The people of the Sangam period made extensive use of naturally available materials such as clay, stone, and wood to produce articles required for domestic, agricultural, and social purposes. Beyond their practical utility, many of these objects were also integrated into cultural practices and traditions, thereby acquiring symbolic and enduring cultural significance. This harmonious blending of utility and cultural value stands as evidence of the refined lifestyle and creative ingenuity of the ancient Tamils. Sangam literary works contain numerous references to these material objects and describe the diverse ways in which they were used in different aspects of life. This article examines the material culture reflected in Sangam literature, highlighting the everyday objects employed by the ancient Tamils and their cultural, social, and functional significance in shaping Tamil civilization.

**Keywords:** Ancient Tamils, Material Artifacts, Tamil Civilization, Material Culture, Objects And Materials,

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழரின் வாழ்வியலை பிரதிபலிக்கும் காலக்கண்ணாடி ஆகும். மக்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் பொருட்கள் பற்றிய குறிப்புகள் மிகவும் நுணுக்கமானவை. சங்ககால மக்கள் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்வை மேற்கொண்ட சிறப்பினை புழங்குபொருட்கள் உணர்த்துகின்றன. மேலும் மண்> கல்> மரம் போன்ற இயற்கை சார்ந்த பொருட்களை தமது அன்றாட வாழ்விற்கு பயன்படும் விதமாக அமைத்துக் கொண்டதே அன்றி. அப்பொருட்களை காலம் கடந்து வாழும் விதமாக பண்பாட்டோடு தொடர்புபடுத்தியும் பயன்படுத்திருப்பது தமிழர்களின் தலைசிறந்த வாழ்க்கைக்குச் சான்றாக அமைகின்றன. தமிழர்கள் பயன்படுத்திய புழங்குபொருட்களை பற்றிய குறிப்புகள், பல்வேறு நிலைகளில் பயன்படுத்திய முறைகளும் இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றன அதனை காண்போம்.

## உரல்

விளைந்த நெல்லில், அரிசியையும் உமியையும் தனியே பிரித்தெடுக்க பயன்படுத்திய பொருள் உரல் என அழைத்தனர். இது இருபொருளால் செய்யப்படுகின்றது நன்கு முற்றிய விளந்த தாழ்ந்து நிற்கும் கதிரை உரலினை வாங்கிவந்து அதனை வீட்டின் உள்ளோ, வெளியோ அப்படியே வைத்து இடிக்கும்பொழுது> சாய்ந்து போவதற்கோ அல்லது நழுவி நழுவி நகர்ந்து போவதற்கோ வாய்ப்புகள்

உண்டு. நழுவாமலோ சாயாமலோ இருக்க உரலினை நிலத்திலே குழிதோண்டி புதைத்து, அதன் மேல் உலக்கையைக் கொண்டு நெல் குற்றினர். இதனை,

"நீழுல் முன்றில் நிலஉரல் பெய்து பத்து"[1]

எனும் பத்துப்பாட்டு நூலால் அறிய முடிகின்றது. இம்முறை மரபு ரீதியாக தொடர்ந்து காணமுடிகின்றது. வீட்டின் முற்றத்தில் உரலை வைத்து நெல் இடித்தனர். உரல்போன்ற பெரிய காலையும், ஒளியுடைய கொம்பையும், பெரிய துதிக்கையையும் மதத்தையும் உடைய யானைகள் என யானையின் தன்மையினையும், வலிமையினையும் விளக்க, உரல் பயன்படுத்தப்பட்டிருப்பதைப் பதிற்றுப்பத்து,

"புழல் தலைப் புகர்க்காலை உருட்டி உரல்தலைக்

கேழல் பன்றி வீழழு" [2]

துளை பொருந்திய கொம்பையுடைய கலைமானை வீழ்த்தியது பின் உரல் போலும் தலையையுடைய கேழாகிய பன்றியைக் கொன்றது என அம்பின் வலிமையைக் குறிப்பிடும் இடத்து, உரலை போன்று தலையுடைய பன்றி என்று புறநானூறு சுட்டுகின்றது. கலித்தொகையிலும் உரலைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஒப்புமைப் பொருளிலும், உபயோகப் படுத்தும் பொருளிலும் உரல் பயன்படுத்தப்பட்டிருப்பதை இலக்கியங்கள் சுட்டுகின்றன. மேலும் இதனை,

"ஆடுகழை நெல்லை அழை உரலுள் பெய்து" [3]

மூங்கிலினது நெல்லை பாறையாகிய உரலுள் செய்து குற்றினர். ஐவனமாகிய வெண்நெல்லைப் பாறையாகிய உரலிலே இட்டு இடித்தனர் என உரலானது கல்லிலே இருந்ததனைக் கலித்தொகை குறிப்பிடுகின்றது. இலக்கியங்களில் உரலைப் பற்றிய குறிப்புகள் நிரம்பக் காணப்படுவதால்> அக்காலத்தில் மக்கள் வாழ்வில் உரல் எத்தகைய சிறப்பு பெற்றிருந்தது என்பதனை அறிய ஏதுவாகிறது.

## உலக்கை

தமிழர் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டமையால் இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னதமானப் புழங்குபொருள் உலக்கை ஆகும். சோறாக்கும் பெண் முகந்து கொணர்ந்த அளக்கப்படாத வெண்ணெல்லையுடைய பூணிடப்பட்ட பருத்த உலக்கையால் குற்றி உண்டான அரிசி கொண்டு புறநானூற்றுத் தலைவி உணவு சமைத்ததனைக் குறிப்பிடுகின்றது. உலக்கைக்கு இரும்புப் பூண் போடும் வழக்கம் இன்றும் தொடர்வதனைக் காண முடிகின்றது.

"தொடிமான் உழக்கைத் தூண்டு உரல்பாணி

நெடுமால் வரைய குடினைஞயோடு இரட்டும்"[4]

பூண்மாண்ட உலக்கையில் உயர்த்திக் குற்றும் உரலினின்று அழும் ஒலி நீண்ட பெரிய பக்க மலையிலுள்ள ஆந்தை ஒலியோடு மாறிமாறி ஒலிக்கும்.

"பாசவல் இடிக்கும் இருங்காழ் உலக்கை" [5]

பெரிய வயலிடத்து விளைந்த நெல்லின் விளைந்த கதிரை முறித்துக் கரிய நிறமுடைய வயிரம் பாய்ந்த உலக்கையால் பச்சை அவலை இடிப்பாள் என அகநானூறு சுட்டுகின்றது. உலக்கையை மேலே கீழே ஏற்றி இறக்கி குற்றும் போது உண்டாகும் ஒலி அனைவரின் கவனத்தை ஈர்ப்பதோடு, நல்ல இசையையும் கொடுக்கின்றது.

"குறுங்காழ் உலக்கை ஓச்சி நெடுகிணற்று"[6]

தாம் கொணர்ந்த புல்லரிசியை, வயிரமேறிய உலக்கையால் குற்றினர் என பத்துப்பாட்டு குறிப்பிடுகின்றது.

## அரிவாள்

அறுபடாத பண்பாட்டுத் தொடர்ச்சியாக பன்னெடுங்காலமாய் மக்களின் வாழ்வோடும் பண்பாட்டோடும் பின்னிப்பிணைந்து காணப்படும் புழங்குபொருள் அரிவாள் என்று பெயரிட்டு அழைக்கப்படுகின்றது. நாகரிகத்தை விரும்பும் மக்களின் கைகளில் அதற்கு ஏற்றாற் போல எத்தனையோ நவீன பொருள் புழங்க தொடங்கிய போதும் அரிவாள்; எல்லோராலும் இன்றும் பயன்படுத்தப்படுவது முன்னோரின் அறிவுசார்ந்த ஆற்றலுக்கு சிறந்த சான்றாகும்

"அணில் வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட" [7]

அணிலின் மேலுள்ள வரி போல் வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்து இடப்பட்ட விதை என புறநானூறு அரிவாள் பற்றிக் குறிப்பிடுகின்றது மேலும்,

"எஃகு போழ்ந்து அறுத்த வால்நினக் கொழுங்குறை

மைஊன் பெய்த வெண்ணெய் வெண்சோறு"[8]

அரிவாளால் பிளந்து அறுத்த வெள்ளிய நிணத்தோடு கூடிய கொழுவிய துண்டாக்கிய ஆட்டின் இறைச்சியை சமைத்து சோற்றில் ஊற்றி உண்டனர் என பதிற்றுப்பத்து கூறுகின்றது.

## அடுப்பு

நாட்டுப்புறப் புழங்குபொருட்களான அம்மி, ஆட்டுக்கல், தொம்பை போன்ற எண்ணற்றப் பொருட்களெல்லாம், எல்லோருடைய வீடுகளிலும் இருக்கும் என்பதனை உறுதியாக சுட்டமுடியாத போதும், எல்லோருடைய வீடுகளிலும் இருக்கும் என உறுதியாக சுட்டும் பொருள் 'அடுப்பு' என்ற புழங்குபொருள் மட்டுமே. பண்டையக் காலந்தொட்டு பயன்படுத்தப்பட்டு வரும் இப்புழங்கு பொருள் பற்றி இலக்கியங்களும் சிறப்பித்து சுட்டுகின்றன.

"ஆடு நனிமறந்த கோடுஉயர் அடுப்பின்

ஆம்பி பூப்ப தேம்புபசி உழவர்"

உணவு சமைத்தலை மிகவும் மறந்து, உயர்ந்து ஓங்கிய அடுப்பில் காளான் பூத்துள்ளது என வறுமையை சுட்டும் கருத்திலும் அடுப்பு பயன்பட்டதாக புறநானூறு குறிப்பிடுகின்றது.

"கூந்தல் விறலியர் வழங்குக அடுப்பே"[9]

புகழுதலுக்குரிய பிற பருப்பு வகைகளை அடுப்பிலே ஏற்றி சமைத்தார்கள் என்ற செய்தினை பதிற்றுப்பத்து சுட்டுகின்றது. மேலும்,

"பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீஇ" [10]

இலக்கியக் காலந்தொட்டு இன்று வரையிலும் அடுப்பு மிகுந்த பயன்பாட்டு பொருளாகவும், பண்பாட்டு பொருளாகவும் புழங்கப்பட்டு வருகின்றன. ஒற்றை அடுப்பு, கொடி அடுப்பு என இரண்டு வகையாக அடுப்பு பயன்படுத்தப்படுகின்றது. அடுப்பின் பயன்பாடு நாள்தோறும் இருப்பதினால், இதனை மக்கள் மிக கவனமாகப் பாதுகாக்கின்றனர்.

## மோர் பானை (தயிர் பானை)

பண்டைய தமிழர்கள் ஆடு, மாடுகளை தெய்வத்துக்கு நிகராக மதித்து வணங்கி போற்றி வந்தனர். ஆடு, மாடுகளைக் கொண்டே செல்வ நிலையை மதிப்பிட்டு வந்தனர், ஆடு, மாடு இவற்றினால் கிடைக்கும் பாலினைக் கடைந்து தயிராக எடுத்து உண்டனர். பாலினைக் கடைந்து தயிராக்கி அவற்றினைத் தயிர்ப் பானையில் நிரப்பி, தலையிலே சும்மாடு வைத்து தூக்கிக் கொண்டு வீதி வீதியாகச் சென்று விற்றனர் என்பதை புறநானூறு,

"வெண் கோள் தோன்றாக் குழசியொடு

நூள் உறை மத்துஒலி கேளா தேனேழு" [12]

பாலைக் கறந்து அதனை நன்கு காய்ச்சி பிறகு சிறிது தயிரிட்டு உறைய வைப்பர். பின்பு பானையுள் மத்தினைவிட்டு கடைவர். அவ்வாறு கடையும்பொழுது தயிர் உண்டாகும். அத்தகைய தயிர்கடையும் ஓசை கேட்பதற்கு முன்னதாகவே விரைந்து சென்று, இரப்போர்க்கு பொருள் கொடுக்கக்கூடிய தன்மையை உடைய அரசன் என புறநானூறு குறிப்பிடுகின்றது.

## மத்து

இலக்கிய காலந்தொட்டு இன்றளவும் பயன்படுத்தப்பட்டு வரும் புழங்குபொருள் 'மத்து' என அழைக்கப்படுகின்றது. தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுக்க மத்து இன்றும் நிரம்ப இல்லங்களில் பயன்படுத்தப்படுகின்றது.

"புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி"[13]

உறையிட்டு இறுகிய தயிரைப் புலிபோன்ற முழக்கத்தையுடைய மத்தினை ஆரவாரிக்கும்படி கயிற்றால் இழுத்து வெண்ணெய் உண்டாக்கியதனை பத்துப்பாட்டு சுட்டுகின்றது.

“நுரைதெரி மத்தம் கொளீஇ நிரைப்புறத்து"[14]

வெண்ணெயை வெளிக்கொணர மத்தினை பயன்படுத்தினர் என்றும், தயிரைக் கடைந்த திரண்ட தண்டினையுடைய மத்து என்றும் அகநானூற்றுத் சுட்டுகின்றது. சங்ககால தலைவி மட்டுமின்றி, பயன்பாடு சிறிதும் மாறாமல், இன்றும் புழங்கப்பட்டு வருகின்றது.

## வெட்டுக் கட்டை

பெரிய பெரிய விறகினை வைத்து நறுக்கவும், கழித்த கருவ மரத்திலே எஞ்சிய முட்களை நறுக்கவும், ஆடு, கோழி, போன்ற இறைச்சி பொருளை வெட்டவும், இளநீர், பனங்காய் போன்றவற்றை வெட்டவும் பயன்படுத்தப்பட்ட புழங்கு பொருளை வெட்டுக்கட்டை என்ற பெயரிட்டு அழைக்கின்றனர். இவ்வெட்டுக்கட்டையைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. தமது இல்லத்திலே உண்ணும் பொருட்டு, ஆட்டு வணிகர், இறைச்சியைக் கட்டையின் மீது வைத்து கொத்திய ஆட்டு இறைச்சியைப் பயன்படுத்தினர் என்பதனை பதிற்றுப்பத்து குறிப்பிடுகின்றது.

“வளைதலை மாத்த தாழ கருத்பாசவர்

எஃகுஆடு ஊனம் கடுப்ப மெய்சிதைந்து "[15]

இறைச்சி விற்பவருடைய வெட்டும் அரிவாளால், ஊனைக் கொத்தும்போது மரக்கட்டையானது எவ்வாறு சிதையுமோ அது போல, உடம்பு சிதைந்து போனதாக பதிற்றுப்பத்து தலைவனின் வீரத்தைப் பறைசாற்றி நிற்கின்றது.

## மண் குதிர் (அல்லது) தொம்பை

மண்பாண்டத் தொழிலே மிகவும் பெரியதாகக் காணப்படுவது குதிர் அல்லது தொம்பை ஆகும். பண்டைய காலத்தில் இறந்தவர்களின் உடலை பெரிய மண்பானையில் இட்டு புதைத்ததாக இலக்கியங்களும், ஆய்வாளர்களும் குறிப்பிடுகின்றனர். இத்தகையப் பானையினை 'முதுமக்கள் தாழி' என்று அழைக்கின்றனர். அதனைப் போல பல மடங்கு பெரிய உருவமாய் காட்சி அளிப்பது மண்குதிர் அல்லது தொம்பை ஆகும். பறக்க பறக்க எவ்வளவுதான் சிரமம் மேற்கொண்டு உழைத்தாலும், அந்த உழைப்பினால் கிடைத்த பொருளைப் பாதுகாக்கவில்லையென்றால், எதிர்கால வாழ்க்கை சிரமம் கொண்டதாய் அமைந்துவிடும் என்பதனை அறிந்த நாட்டுப்புறமக்கள், பயன் கருதி, எதிர்கால நலன் கருதி தொம்பை அல்லது குதிரை என்ற மண்பொருளைப் பயன்படுத்தியுள்ளனர். இக்குதிரில் நெல், கம்பு, சோளம், வரகு போன்ற தானிய வகைகளை இட்டுப் பாதுகாத்துள்ளனர். மண்தொம்பை, மரத்தொம்பை, மண்குதிர், மரக்குதிர் என மண்ணாலும் மரத்தாலும் அமைவன இப்புழங்கு பொருளாகும். பெரும்பாலும் இல்லத்தின் உள்ளேயும் திண்ணையிலும் அமைந்திருப்பனவாகும். இதனை,

“குமரி மூத்த கூடுஓங் நல்இல்"[16]

பழைய நெல்லையும் உடையனவாய்க் கண்ணிமையோடு உயர்ந்து நிற்கும் முதிர்ந்த நெற்கூடுகள் அவ்வில்லங்களில் காணப்படும் என்று புறம் குறிப்பிடுகிறது.

## முடிவுரை

தங்களின் வேண்டுதலுக்காகவும், தெய்வங்களின் நேர்த்திக் கடனுக்காகவும் 'மாவிளக்கு' போடும் வழக்கம். அனைத்து இன மக்களிடமும் பரவலாக காணப்படுகின்றது. அவ்வாறு மாவிளக்கு போடும் மக்கள், உரல் உலக்கையைக் கொண்டு இடித்து மாவிளக்கு போடுகின்றனர். இல்லையெனில் தெய்வக்குற்றம் ஆகுமென மக்கள் நம்புகின்றனர் மக்களின் வாழ்வோடும் பண்பாட்டோடும் பின்னிப் பிணைந்து காணப்படும் உலக்கை, தமிழ் மக்களால் பெரிதும், போற்றப்படும் புழங்கு பொருளாக காட்சியளிக்கின்றது. அரிவாள், அரிவாள் வெட்டும் கட்டை, தானியங்களை சேமித்து வைக்கும் குதிர் போன்ற புழங்குபொருட்களின் பயன்பாட்டை இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

## References

அ. விசுவநாதன், கலித்தொகை,

ஆ. ஆலிஸ், பதிற்றுப்பத்து

இரா. ஜெயபால், அகநானூறு

இராகவையங்கார், பெரும்பாணாற்றுப்படை

ஔவை. துரைச்சாமிப்பிள்ளை, புறநானூறு

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License